# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,196 — 1960 සැප්තැම්බර් 9 වැනි සිකුරාදා — 9.9.1960

12,196 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 221 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 221 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | 222 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சௌக்கியப் பகுதி

**தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் அனுமதிப்பதற்காகப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுத்தல், 1960/61 (தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும்)**

1960 ம் ஆண்டு யூலை மாதம் 22 ந் திகதிய 12,162 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 18.7.60 திகதியிடப்பட்ட விளம்பரத்தின் சார்பாக மேற்குறிக்கப்பட்ட பரீட்சை முன்குறிப்பிட்டது போன்று 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ந் திகதி நடைபெற மாட்டாது. பதிலாக 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி நடைபெறும்.

செ. பொன்னம்பலம்,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

மத்திய பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் 5.10.60 புதன்கிழமை காலை 10 மணிவரையும் ரூபா 10,000 த்திற்கும் அதற்கு மேற்படவும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொருட்கள் கொண்டு போகவும், வரவும் கேள்விப் பத்திரங்கள் ஏற்பார்.

கேள்விப் பத்திரங்கள் 1.9.60 தொடக்கம் 3.10.60 பிற்பகல் 4.30 மணி வரைக்கும் மாத்தளையில் உள்ள நீர்ப்பாசன இஞ்சினியருடைய காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். வேலையை ஒத்த ஏனைய விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ரூபா 25 ஒரு கச்சேரியிலோ அல்லது மேற்கூறிய காரியாலயத்திலோ பிணைப் பணமாகக் கட்டிப் பற்றுச்சீட்டு கொண்டுவருபவர்களுக்கு மட்டும் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

சி. துரைராசசிங்கம்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மாத்தளைப் பகுதி.

நீர்ப்பாசன காரியாலயம்,
மாத்தளை.

### நீர்ப்பாசனப் பகுதி

1960 ம் வருடம் ஐப்பசி மாதம் முதலாந் தேதி (1.10.60) தொடக்கம் 1961 ம் வருடம் புரட்டாதி மாதம் 30 ந் தேதி (30.9.61) வரை நீர்ப்பாசன பகுதி வவுனிக்குளத் திட்டத்தின் கீழ் அரசாங்க பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வடபகுதி பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர் (வவுனியா) அவர்களால் 29.9.60 வியாழக்கிழமை காலை 9.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ரூபா 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு இப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு மாத்திரமே வவுனிக்குளத்திட்டம் நீர்ப்பாசன இஞ்சினியர் (மாங்குளம்) அவர்களால் 28.9.60 புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். இவரிடமிருந்து மற்றும் விபரங்கள் யாவும் தெரிந்து கொள்ளலாம்.

### நீர்ப்பாசன இலாகா

பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் (திரிகோணமலைப் பகுதி) உவர்மலை, திரிகோணமலை, அவர்களால் 20.9.60 காலை 9.30 மணிவரை இவ்விலாகாவில் ரூபா இருபதினாயிரத்திற்கும் (ரூபா 20,000/–) அதற்குக் கூடிய தொகைக்கும் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, அல்லை விஸ்தரிப்புத்திட்ட நீர்ப்பாசனக் கந்தோருக்குப் பலவிதச்சாமான்களும் ஏற்றுமதி செய்து கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர், கல்லார், கிளிவெட்டி, அவர்களிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரத்தில், கேள்விப்பத்திரம் இருபிரதிகளாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

கேள்விப்பத்திரங்கள், தாம் இவ்விலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் என்று நிரூபிப்பவர்களுக்கும், நீர்ப்பாசனக் கந்தோரில், கல்லார், கிளிவெட்டி அல்லது ஒரு கச்சேரியில் கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா 25 கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுள்ளவர்களுக்கும் மட்டுமே 17.9.60 நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும். அத்துடன் தற்சமயம் அரசாங்கத்தில் ஒப்பந்த வேலை செய்து கொண்டிருப்பவர்கள் கேள்விப் பத்திரம் பெறுவதற்கு, அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள அதிபரிடமிருந்து, அவர்கள் ஒப்பந்தவேலை திருப்திகரமாய் செய்கிறார்களென்பதை நிரூபிப்பதற்குரிய பத்திரம் ஒன்றுபெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தோர் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்கள் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், திரிகோணமலைப் பகுதி, திரிகோணமலை, அவர்களால், அவரது கந்தோரில் 20.9.60 காலை 10 மணிக்குத் திறக்கப்படும்.

எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அல்லை விஸ்தரிப்புதிட்டம்.

கல்லார், கிளிவெட்டி,
1960 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 29 ந் உ.

### நீர்ப்பாசன இலாகா—திருகோணமலை, உப-பகுதி

(அ) பெரும் பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர் திருகோணமலை அவர்களால் 1960–61 நிதிவருடத்தில் திருகோணமலை உபபகுதியில் இருக்கும் வேலைத்தளங்களுக்குப் பண்டம் ஏற்றி யிறக்குவதற்கு 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரைக்கும் இந்த இலாகாவில் ரூபா 20,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட, லொறியுடைய கொந்திராத்துக்காரர்களிடமிருந்து சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) கேள்விப் பத்திரங்கள் கீழ்க்கையொப்பமிடப்பட்டிருப்பவரிடமிருந்து 19.9.1960 வரையும் (காரியாலய நேரங்களில்) பெற்றுக்கொள்ளலாம். கையொப்பமிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரணையாக திருகோணமலை

பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், உவர்மலே, திருகோணமலே என்ற விலாசத்திற்கு 21.9.1960, காலே 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது மேல் மூலேயில் வேலேயின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

(இ) எந்த மாகாண அதிபர் கந்தோரிலாவது ரூபா 25 கட்டிய பற்றுச் சீட்டுடன் மற்றும் வேலே பற்றிய தராதரங்கள் அத்தாட்சிப்படுத்துபவர்களுக்கும் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும்.

(ஈ) தனித்தனியே சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு மனுச் செய்யும்போது, தற்சமயம் அரசாங்கத்தில் கொந்தருத்து வேலே செய்பவர்கள் அப்பகுதி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட நல்வேலே வேலேப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(உ) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரங்கள் அனுப்பியவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இன்னும் தேவையான விபரங்களுக்குக் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து விண்ணப்பித்துக் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவசுப்பிரமணியம்,
உப-நீர்ப்பாசன கந்தோர் அதிபர்.
திருகோணமலே உப-பகுதி.

உள் துறைமுகத்தெரு, திருகோணமலே,
1960 ம் ஆண்டு ஓகஸ்ற் மீ 31 ந வ.

---

**ரெண்டர் நடுகைப் பயிர் ஏற்றிச் செல்ல—மொனறுகலே டிஸ்திறிக்**

மொனறுகல டிஸ்திறிக் அரசாங்க அதிபர் 23.9.60, முற்பகல் 12 மணி வரையில் கீழ் குறிக்கப்பட்ட பயிர்களே ஏற்றிச் செல்வதற்கு ரெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்வார் :—

மொனறுகல அதிபர் இடம் 21.9.60, பிற்பகல் 3 மணி வரையில் ரூபா 25 கட்டிய பத்திரம் கொடுப்போர் ரெண்டர் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 25 திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டப்படல் வேண்டும்.

ரெண்டர் பத்திரங்கள் மொனறுகல அரசாங்க அதிபருக்கு சீல்போட்ட என்வலப்புள் " ரெண்டர் பயிர்கள் ஏற்றுமதிக்கு " என போட்டு அரசாங்க அதிபர், மொனறுகலேக்கு அனுப்பப்படவேண்டும். ரெண்டர்கள் றெஜிஸ்டர் பண்ணப்படவேண்டும் அல்லது ரெண்டர் பெட்டியில் போடவேண்டும். பெட்டி கச்சேரி ஸ்தான அதிபரிடம் உண்டு.

**பிரமாணங்கள் :**

(1) அரசாங்க அதிபருக்கு ரெண்டர்களே ஏற்கவோ விடவோ அதிகாரம் உண்டு.

(2) அதிபர் பயிர்கள் உள்ள இடம் இருந்து கொடுக்கும் இடம் கொண்டுபோகும் தொகையை தீர்மானிப்பார்.

(3) அதிபர் ஏற்றிச் செல்லும் விபரங்களே தீர்மானிப்பார்.

(4) அதிபர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் 24 மணித் தியால எல்லேக்குள் ஏற்றிச் செல்ல கட்டளே இடுவர்.

(5) ஏற்றுமதிக்கு குறிப்பிட்ட பணம் ஏற்றுமதி இறக்குமதி கூலியும் உட்படவேண்டும்.

(6) அதிபரால் அதிகாரம் பெற்றவர் சொல்லியவண்ணம் ஏற்றுதல் இறக்குதல் செய்தல் வேண்டும்.

(7) ரெண்டர் பெற்றவர் பொருள்களே ஏற்றிச் செல்லும்பொழுது பாதுகாக்க வேண்டும்.

வெவ்வேறு ரெண்டர் வெவ்வேறு பயிர்களுக்கு இருக்க வேண்டும். ரெண்டர் பெறுவோருக்கு லொறியின் நம்பர் போடவேண்டிவரும்.

**விபரங்கள்**

| பயிர் | பெறும் இடம் | கொடுக்கும் இடம் |
|---|---|---|
| 1. தென்னம்பிள்ளே | (1) கொக்கலே காலி பகுதி | (1) எற்றிமொல கொலனி |
| | (2) டமற்றிவில கம் பாந்தோட்டை | (2) மாகந்தன் ஓயா கொலனி |
| | (3) மயிலங்கா வெல மட்டக்களப்பு | (3) குபந்தாவ கொலனி |
| | (4) வத்தல கொட குருநாக்கல் | (4) நக்கல கொலனி |
| | (5) கந்தபாங் கல வெள்ளவாயா அப்புறம் | (5) தெனுல ஸ்கீம் |
| | | (6) உடகம் ஸ்கீம் |
| | | (7) ஒக்கம்பிற்றிய ஸ்கீம் |
| | (6) நக்கல, மொனறுகல அப்புறம் | (8) மடுகஹபற்றி ஸ்கீம் |
| | | (9) அத்தல ஸ்கீம் |
| | | (10) போகாகப்பயர் ஸ்கீம் |
| | | (11) யக்குரச ஸ்கீம் |
| (2) வாளேக்குட்டி | .. (1) விகாறயா கொலனி | மேற்குறித்த 1–2 போல் |
| | (2) கந்தபாங் கல கொலனி | மேற்குறித்த 1–2 போல் |
| (3) எனுமிச்சை | .. (1) பிபிலே பயிர் ஸ்ரேசன் | மேற்படி |
| (4) தோடை | .. (1) மேற்படி | .. (1) எற்றிமொலே கொலனி |
| | | (2) நக்கலே கொலனி |
| (5) றப்பர் | .. (1) ஈ. கல்ஓயா மேடை, களுத் துறை பகுதி | (3) தெனுல ஸ்கீம் |
| | | (1) கற்றுகாகல கொலனி |
| | | (2) மடுகஹபிற்றிய ஸ்கீம் |

ஏறக்குறைய பின்வரும் தொகைகள் ஏற்றிச்செல்ல வேண்டும் :—

132,500 தென்னம்பிள்ளேகள்,
196,000 வாழைக்குட்டிகள்,
65,000 எனுமிச்சை கன்றுகள்,
5,000 தோடங்கன்றுகள்,
2,000 றப்பர் கன்றுகள்.

வீ. பீ. சில்வா,
மொன்றுகல டிஸ்திறிக் அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, மொனறுகலே,
1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 2 ந வ..

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

**மொனறுகலே நீர்ப்பாசன உப பகுதியிலுள்ள எற்றிமொல வாவியின் பிரதான கட்டு உடைப்பை நிரப்புவதற்குரிய கேள்விப்பத்திரங்கள்**

கீழ் குறிக்கப்பட்டோரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டன :—

(1) திரு. ஏ. சமரவீரா, உவெமுல்லேத் தோட்டம், வெளிமடை.

(2) திரு. எஸ். எச். யயதிலகா, கட்டிடவேலேக் கொந்தருத்துக்காரர், 857, பெரதெனியா வீதி, கண்டி.

(3) திரு. டப்ளியு. டீ. எம். அபெயசேகரா, 22, டொறிங்ரன் தெரு, கொழும்பு 7.

(4) திரு. தெ. சிற்றி கொன்ஸ்றக்சனஸ் உவோர்க்ஸ், மருதானே வீதி, கொழும்பு 10.

தெரிவு.—திரு. ஏ. சமரவீராவின் கேள்விப்பத்திரம், ரூபா 94,027.50 க்கு தெரிவு செய்யப்பட்டது.

டீ. ஜே. ராமநாயக்கா,
பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர்,
ஊவாப் பகுதி.

பண்டாரவளே,
ஆகஸ்டு 14, 1960.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.